# பன்னாட்டு நாணய நிதிய அலுவலர்கள் இலங்கைக்கான விஜயத்தினை நிறைவுசெய்துள்ளனர்

30 யூன் 2022

| |
|---|
| அலுவலர் விஜயத்தின் நிறைவிலான பத்திரிகை வெளியீடுகள் நாடொன்றிற்கான அதனது விஜயத்தின் பின்னர் பூர்வாங்க கண்டுபிடிப்புக்களை தெரிவிப்பதற்காக பன்னாட்டு நாணய நிதியத்தின் அலுவலர்களின் கூற்றுக்களை உள்ளடக்குகின்றது. இவ்வறிக்கையில் தெரிவிக்கப்படும் கருத்துக்கள் பன்னாட்டு நாணய நிதிய அலுவலர்களின் கருத்துக்களேயன்றி அது பன்னாட்டு நாணய நிதியத்தின் நிறைவேற்றுச் சபையின் கருத்தினைப் பிரதிபலிக்க வேண்டுமென்ற அவசியமில்லை. இந்த விஜயமானது ஒரு சபைக் கலந்துரையாடலுக்கு வழிவகுக்காது. |

- குழுவானது அதிகாரிகளுடன் விரிவாக்கப்பட்ட நிதிய வசதியொன்றின் கீழ் ஆதரவளிக்கப்படவுள்ள பொருளாதார கொள்கைகள் மற்றும் சீர்த்திருத்தங்கள் என்பவற்றின் மீது காத்திரமானதும் மிகவும் வினைத்திறன் வாய்ந்ததுமான கலந்துரையாடல்களில் ஈடுபட்டிருந்தது.

- கணிசமான முன்னேற்றங்கள் காணப்பட்டிருந்ததுடன் விரிவாக்கப்பட்ட நிதிய வசதியொன்றிற்கான ஏற்பாடுகள் கீழ் குறுகிய காலத்தில் அலுவலர்சார் மட்டத்திலான உடன்படிக்கையினை அடைந்துகொள்வதனை நோக்கி கலந்துரையாடல்கள் தொடர்ச்சியாக மெய்நிகர் வழியாக மேற்கொள்ளப்படும்.

- பன்னாட்டு நாணய நிதியத்தினால் ஆதரவளிக்கப்படும் புதிய நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கங்கள் பேரண்டப்பொருளாதார உறுதிப்பாடு மற்றும் படுகடன் உறுதிப்பாடு என்பவற்றை மீள்நிறுத்துகின்ற அதேவேளை வறிய மற்றும் பாதிக்கப்படக்கூடிய தன்மையிலுள்ள மக்களை பாதுகாத்தல், நிதியியல் உறுதிப்பாட்டை பாதுகாத்தல், மற்றும் ஊழல் சார்ந்த பாதிக்கப்படக்கூடிய தன்மைக்கு தீர்வு காண்பதற்காக மேற்கொள்ளப்படவேண்டிய கட்டமைப்புசார் சீர்த்திருத்தங்களை முன்னெடுத்தல் மற்றும் இலங்கையின் வளர்ச்சி உத்வேகத்திற்கு வழியமைத்தல் போன்றவற்றை உள்ளடக்குகின்றன.

மெஸர்ஸ். பீடர் புருர் மற்றும் மசாகிரோ நொசாகி ஆகியோரால் வழிநடாத்தப்பட்ட பன்னாட்டு நாணய நிதியத்தின் குழுவானது இலங்கைக்கான பன்னாட்டு நாணய நிதியத்தின் உதவி மற்றும் அதிகாரிகளின் விரிவான பொருளாதார சீராக்க நிகழ்ச்சித்திட்டங்கள் என்பவற்றை கலந்துரையாடுவதற்காக 2022 யூன் 20 தொடக்கம் 30 வரையான காலப்பகுதியில் கொழும்பிற்கு விஜயத்தினை மேற்கொண்டிருந்தது. பன்னாட்டு நாணய நிதியத்தின் ஆசிய மற்றும் பசுபிக் பிராந்தியத்திற்கான பிரதிப் பணிப்பாளர் திருமதி ஆன்-மரி கல்ட்-ஊல்ப் கொள்கைக் கலந்துரையாடல்களில் பங்குபற்றியிருந்தார்.

விஜயத்தின் நிறைவில், மெஸர்ஸ். புருர் மற்றும் நொசாகி ஆகியோர் பின்வரும் அறிக்கையினை வெளியிட்டிருந்தனர்:

"இலங்கையானது கடினமானதொரு பொருளாதார நெருக்கடியினை கடந்து செல்கின்றது. பொருளாதாரமானது 2022இல் கணிசமானதொரு சுருக்கத்தினை அடையுமென எதிர்பார்க்கப்படுகின்ற அதேவேளை பணவீக்கமானது உயர்வானதாகவும் உயர்வடைந்து செல்வதாகவும் காணப்படுகின்றது. மிகவும் குறைந்த மட்டத்தில் காணப்படுகின்ற வெளிநாட்டு ஒதுக்கமானது அத்தியாவசிய பண்டங்களின் இறக்குமதியை பாதித்துள்ளது. நேரடியான விஜயத்தின் போது, குறிப்பாக நெருக்கடியினால் விகிதசமமற்ற வகையில் பாதிக்கப்பட்டுள்ள வறியவர்கள் மற்றும் பாதிக்கப்படக்கூடிய தன்மையுள்ள

இலங்கை மக்களால் தற்போது முகங்கொடுக்கப்பட்டுவருகின்ற சில கடினத்தன்மைகளை குழுவானது நேரடியாக கண்டிருந்தது. இத்தகைய கடினமான காலப்பகுதியில் பன்னாட்டு நாணய நிதியத்தின் கொள்கைகளுக்கு இணங்கிச்செல்லும் வகையில் இலங்கைக்கான உதவியினை மேற்கொள்வதற்கான எங்களது அர்ப்பணிப்புக்களை நாங்கள் மீள வலியுறுத்துகின்றோம்.

"ஏப்பிரல் மாதத்தின் ஆரம்பத்திலிருந்து மேற்கொள்ளப்பட்ட அதிகாரிகளின் நாணய, இறைக்கொள்கை மற்றும் ஏனைய நடவடிக்கைகள் என்பன நெருக்கடியினை தீர்ப்பதற்கு முக்கியமான முதற் படிகளாகும். குழுவானது பன்னாட்டு நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிய வசதியொன்றிற்கான ஏற்பாடொன்றினால் ஆதரவளிப்பதற்காக பொருளாதார கொள்கைகள் மற்றும் சீர்த்திருத்தங்கள் என்பவற்றின் மீது இலங்கை அதிகாரிகளுடன் காத்திரமானதும் மிகவும் வினைத்திறனுமான கலந்துரையாடல்களில் ஈடுபட்டிருந்தது. பேரண்டப்பொருளாதார மற்றும் கட்டமைப்புசார் கொள்கைப் பொதியொன்றினை வரையறுப்பது மீது அலுவலர் குழுவும் அதிகாரிகளும் கணிசமான முன்னேற்றங்கள் அடையப்பட்டிருந்ததுடன் அண்மைக்காலத்தில் விரிவாக்கப்பட்ட நிதிய வசதியொன்றிற்கான ஏற்பாடுகளின் கீழ் அலுவலர்சார் மட்ட உடன்படிக்கையினை அடைந்துகொள்வதனை நோக்கி கலந்துரையாடல்கள் தொடர்ச்சியாக மெய்நிகர் வழியாக மேற்கொள்ளப்படும். பொதுப்படுகடனானது நிலையற்றதாக மதிப்பிடப்பட்டுள்ளமையின் காரணத்தினால் நிறைவேற்றுச் சபையின் ஒப்புதலிற்கு படுகடனின் நிலைத்துநிற்கும் தன்மையானது மீண்டும் நிலைநிறுத்தப்படுமெனும் இலங்கையின் கடன் வழங்குனர்களின் போதுமான நிதியியல் உத்தரவாதம் தேவைப்படுகின்றது."

"இப்பின்னணியில், பேரண்டப்பொருளாதார சமனிலையற்ற தன்மையினை சரிசெய்தல், பொதுப்படுகடனின் நீடித்துநிற்கும் தன்மையை மீண்டும் நிலைநிறுத்துதுல், மற்றும் இலங்கையின் வளர்ச்சி சாத்தியப்பாட்டினை அடையாளங் கண்டுகொள்ளல் போன்றவற்றிற்காக விரிவான பொருளாதார நிகழ்ச்சித்திட்டமொன்றை வடிவமைத்தல் என்பவற்றின் மீது கலந்துரையாடல்கள் கவனம் செலுத்தியிருந்தன. விஜயத்தின் காலப்பகுதியில் உயர்வடைந்துள்ள இறைப்பற்றாக்குறையினை குறைப்பதற்கான தேவைப்பாடு அதேவேளை வறியோர் மற்றும் பாதிக்கப்படக்கூடிய தன்மையிலுள்ளவர்கள் போன்றோருக்கு போதுமான பாதுகாப்பினை உத்தரவாதப்படுத்தல் உள்ளடங்கலான கலந்துரையாடல்கள் கணிசமாக முன்னேற்றமடைந்திருந்தன. குறைந்தளவான அரசிறை மட்டங்களுக்கு மத்தியில், இத்தகைய குறிக்கோள்களை அடைந்துகொள்வதற்கு வேகமாக அடைந்துகொள்ளக்கூடிய வரி சீர்த்திருத்தங்கள் உடனடியாக தேவைப்படுகின்றன. தீர்க்கப்படவேண்டிய ஏனைய சவால்களாவன அதிகரிக்கும் பணவீக்க மட்டங்களை கட்டுப்படுத்தல், கடுமையான சென்மதி நிலுவை அழுத்தங்களை தீர்த்தல், ஊழல்சார் பாதிப்படையக்கூடிய தன்மையினை குறைத்தல் மற்றும் வளர்ச்சியை தூண்டக்கூடிய சீர்த்திருத்தங்கள் போன்றவற்றை உள்ளடக்குகின்றன. அதிகாரிகள் அவர்களின் பொருளாதார சீர்த்திருத்த நிகழ்ச்சித்திட்டத்தினை உருவாக்குதல் தொடர்பில் கணிசமான முன்னேற்றங்களை அடைந்துள்ளதுடன் நாங்கள் தொடர்ச்சியாக அவர்களுடனான கலந்துரையாடல்களை மேற்கொள்வதற்கு தயாராகவுள்ளோம்.

"குழுவானது சனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ, பிரதம மந்திரியும் நிதியமைச்சருமான ரணில் விக்கிரமசிங்க, இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் முனைவர் பி நந்தலால் வீரசிங்க, நிதியமைச்சின் செயலாளர் கே எம் மகிந்த சிறிவர்த்தன, மற்றும் ஏனைய சிரேஸ்ட அரசாங்க மற்றும் மத்திய வங்கி அலுவலர்கள் ஆகியோருடன் கூட்டங்களை மேற்கொண்டிருந்தது. அது பாராளுமன்ற உறுப்பினர்கள், தனியார் துறையினர், உள்ளூர் சமூகம் மற்றும் அபிவிருத்திப் பங்குதாரர்கள் ஆகியோரையும் சந்தித்திருந்தது.

"அதிகாரிகளின் நேர்மையான அணுகுமுறை மற்றும் விருந்தோம்பல் சார்பாக நாங்கள் அவர்களுக்கு நன்றி கூறுவதுடன் இலங்கை மற்றும் அதனது மக்களுக்கு ஆதரவளிப்பதற்காக தொடர்ச்சியாக கலந்துரையாடல்களை மேற்கொள்வதற்காக தயாராக உள்ளோம்."